REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 23 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

වරු. 89 இல. 20 | January 23,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

கொரோனா வைரஸ்;

## 56,075 பேர் தொற்றாளர்கள் 47,983 குணமடைந்தவர்கள்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் புதிதாக 887 பேர் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 13 பேர் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த உள்ளூர் பிரஜைகளாவர்.

06

குற்றச்சாட்டுக்களை விசாரித்து பரிந்துரைகளை வழங்க நடவடிக்கை

# மனித உரிமை மீறல்களை ஆராய மூவரடங்கிய குழு

**ஜனாதிபதி கோட்டாபயவினால் நியமனம்**

**வர்த்தமானி அறிவித்தலும் வெளியீடு**

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மூவரடங்கிய விசேட ஆணைக்குழுவொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் எச்.எம்.எம் நவாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஓய்வு பெற்ற பொலிஸ் மாஅதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செய



லாளர் நிமல் அபேசிறி ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் இந்த விசேட குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக்





பணம் கொடுக்கும் நிறுவனங்களெனும் போர்வையில்

# இணைய நிதி மோசடிகள்; மத்திய வங்கி எச்சரிக்கை

**கடவுச் சொல், OPT இலக்கம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்**

சமூக ஊடகங்கள், இணைய அடிப்படையிலான பயன்பாடுகள் மற்றும் தொலைபேசி கட்டணம் செலுத்தும் விண்ணப்பங்கள் மூலம் பல வகையான நிதி மோசடிகள் மற்றும் பிற மோசடிகள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக இலங்கை





இரகசியமான தனிப்பட்ட வாடிக்கையாளர் தகவல் / தரவு பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

டெபிட் / கிரெடிட் அட்டைகள் – அட்டை எண், தனிப்பட்ட அடையாள எண்கள் (பின்ஸ்), அட்டை சரிபார்ப்பு இலக்கங்கள் பொதுவாக அட்டையின் பின்புறத்தில் காணப்படுகின்றன மற்றும் CVV, CVC அல்லது CVS எண்கள், அட்டை காலாவதி திகதி, பரிவர்த்தனை சரிபார்ப்பு தகவல்கள் ஒன்டைம் கடவுச்சொற்கள் (OTP கள்) இணைய வங்கி – பயனர் ஐடி / பயனர் பெயர், கடவுச்சொல், OTP மொபைல் வங்கி (கட்டண பயன்பாடுகள்) – பயனர் ஐடி / பயனர்பெயர், கடவுச்சொல், OTP தொடர்பாக பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பணம் கொடுக்கும் வணிகங்கள் என்ற போர்வையில் இயங்கும் மோசடிகளுக்கு பலியாகாமலிருக்க உரிய விடாமுயற்சி மற்றும் கவனிப்புடன் செயற்படுங்கள், ஓர் ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன்பு நிதி பரிவர்த்தனை மற்றும் கடன் தரும் பிரிவின் முழு

06

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால பயன்பாட்டுக்கு

# ஒக்ஸ்போட் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகளை பயன்படுத்த அனுமதி

**தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி**



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 வைரஸுக்கு எதிராக *Oxford Astra Zeneca vaccine* தடுப்பூசியை இலங்கையில் அவசரகால பயன்பாட்டிற்கு பயன்படுத்த தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

06





...நடந்துவிட்டது

# இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் செயலை முற்றாக தடுப்பதே ஒரே வழி

**துன்பகர நிகழ்வின் உண்மைநிலை கண்டறியப்படும்**

இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எது நடக்கக் கூடாதென்று விரும்பினேனோ, துரதிஸ்டவசமாக அது இப்போது நடந்துவிட்டது. உயிரிழந்த



வர்கள் இந்திய கடற்றொழிலாளர்களாக இருப்பினும், அவர்களும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகள்.

இலங்கை கடற்பரப்புக்குள் கடற்றொழிலில் ஈடுபட்டிந்த போது ஏற்பட்ட துன்பகரமான சம்பவத்தில் சிக்கிய நான்கு தமிழக மீனவர்களின் சடலங்களும் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது.

06

# வைத்தியர்களையும் விட்டு வைக்காத கொரோனா வைரஸ்



கொவிட்19 இரண்டாம் அலையின் போது 100 வைத்தியர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச்

06

கொரோனாவால் மட்டுப்படுத்தப்பட்ட அழைப்பிதழ்கள் ;

# பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து 73 ஆவது சுதந்திர தினவிழா



இலங்கையின் 73 ஆவது தேசிய சுதந்திர தின வைபவம் இம்முறை சுகாதார வழிமுறைகளை முழுமையாக பின்பற்றிய நிலையில் எவ்வித குறைப்பாடுகளுமின்றி தேசத்தின் அபிமானத்தை காக்கும் வகையில் வழமை போன்று கம்பீரமான முறையில் நடத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளரும் தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்

06

# பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான வவுச்சர்கள்

**பெப்.28 வரை செல்லுபடியாகும்**

2020ஆம் ஆண்டு முதலாம் வகுப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாடசாலை சீருடைக்கான வவுச்சர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வரை செல்லுபடியாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.





கொரோனா தொற்று அச்சம் ஏற்பட்டுள்ளதன்

06

கொரோனா சிசுவின் தகன வழக்கு;

# ஆட்சேபனை தாக்கலுக்கு சட்ட மாஅதிபருக்கு அவகாசம்



கொரோனா தொற்றுக்குள்ளாகி அண்மையில் மரணித்த 20 நாள் வயதான சிசு தகனம் செய்யப்பட்ட ஆட்சேபனை தாக்கலுக்கு சட்ட மாஅதிபருக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் விசாரணை நடத்த சுகாதார அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருந்த அடிப்படை உரிமை மனுவில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று சட்ட மாஅதிபருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாகீர்த்தி எட்வின் ஆரியதாச காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலா

# தென் கொரியா செல்லும் முதலாவது பணியாளர் குழு

**22 இலங்கையர் நேற்று பயணம்**

22 இலங்கையரைக்



அடக்கத்துக்கு ஏற்பாடு செய்தமையால் தகராறு

# குருநாகலில் மரணித்த நபரின் சடலம் தகனம்

**PCR முடிவால் இறுதி நேரத்தில் மாற்றம்**

# வலப்பனையில் சிறிய நில அதிர்வு உணரல்

**1.8 ஆக பதிவானதாக பணியகம் தகவல்**